ம.அ.1.ந.க.எண்.பி4/7501/2007
ஆணையர் அவர்களின் 11.01.2008 நாளிட்ட குறிப்பு.

## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.56/2008 பொருள் எண். 1

### கட்டிடம் இடிக்க அனுமதி

| வ. எண். | வார்டு எண்.13 | மண்டலம்–1 |
|---|---|---|
| 01 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சீனிவாசபுரம் 2வது தெரு (மேற்கு பகுதி) |
| 02 | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | பணித்துறை, 1986 |
| 03 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.5,930/– |
| 04 | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| 05 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 65 ச.மீ. (699.40 ச.அ.) |
| 06 | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள். | 216, நாள்: 22.11.2007 |

எனவே, மேற்கண்ட கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"11.02.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.11 /2008 நாள் 11.02.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது "

"20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.42/2008, நாள்.20.2.2008ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.57/2008 பொருள் எண்.2

**கட்டிடம் இடிக்க அனுமதி**

| வ. எண். | வார்டு எண்.13 | மண்டலம்–1 |
|---|---|---|
| 01 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சீனிவாசபுரம் 2வது தெரு (கிழக்கு பகுதி) |
| 02 | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | பணித்துறை, 1986 |
| 03 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.5,930/– |
| 04 | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| 05 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 65 ச.மீ. (699.40 ச.அ.) |
| 06 | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள். | 217, நாள்: 22.11.2007 |

எனவே, மேற்கண்ட கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“11.02.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.12/2008 நாள் 11.02.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.40/2008, நாள்.20.2.2008ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.58/2008 பொருள் எண்.3

**பழுதடைந்த பள்ளிக் கட்டிடத்தை இடித்தல் மற்றும் திட்ட மதிப்பீடு**

வார்டு எண்.27 மண்டலம்–2.

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் மற்றும் பணியின் பெயர். | கட்டடத்துறை – அங்கப்பன் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி உருது துவக்கப் பள்ளியில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளிக் கட்டடத்தை இடித்துவிட்டு புதியதாக 2+2 வகுப்பறைகள் (தரைதளம் மற்றும் முதல் தளம்) மாடிப்படி அறை மற்றும் கழிவறை கொண்ட கட்டடம் கட்டும் பணி. |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 75 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகும். |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் பரப்பளவு. | 3215 சதுர அடி |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் புத்தக மதிப்பு | ரூ.2020/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை.../மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத் தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.37.54 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2007–2008ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டத்துறை 2007–2008 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | பின்னர் பெறப்படும். |

எனவே, மேற்கண்ட பழைய பயன்படாமல் உள்ள பள்ளிக் கட்டடத்தை இடிப்பதற்கும் மற்றும் அவ்விடத்தில் இடிமானப்பணியுடன் புதியதாக 2+2 வகுப்பறைகள் (தரைதளம் மற்றும் முதல் தளம்), மாடிப்படி அறை மற்றும் கழிவறை கொண்ட கட்டடம் கட்டும் பணிக்கு 2007–2008 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.37,54,000/– (ரூபாய் முப்பத்தேழு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“7.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.16/2008 நாள் 7.2.2008-ன்படி வார்டு குழுவின் தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.33/2008, நாள்.20.2.2008ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.3.ந.க.எண்.பி1/10293/2007
ஆணையர் அவர்களின் 07.01.2008 நாளிட்ட குறிப்பு.

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.59/2008 பொருள் எண். 4

**பொதுக் கழிப்பிடங்கள் இடிக்க அனுமதி**

| வ. எண் | வார்டு எண்.32 | மண்டலம்–3 |
|---|---|---|
| 01 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | 1. பழைய குட்ஷெட் சாலை மற்றும் 'சி' கல்யாணபுரம் சாலை சந்திப்பு<br>2. சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை<br>3. சாமந்திப்பூ காலனி<br>ஆகிய இடங்களில் உள்ள பொதுக் கழிப்பிடம் |
| 02 | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி<br>1. 1985<br>2. 1980<br>3. 1975 |
| 03 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | 1. ரூ.18,608.85<br>2. ரூ.10,998.63<br>3. ரூ.12,984.71 |
| 04 | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்துள்ளதால்இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| 05 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 1. 604 சதுர அடி.<br>2. 604 சதுர அடி.<br>3. 604 சதுர அடி. |
| 06 | திட்ட முன் மொழிதல் | புதியதாக நவீன முறையில் பொதுக் கழிப்பிடம் கட்டும் பணி. |
| 07 | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள். | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.769 நாள்:26.11.2007. |

எனவே, மேற்கண்ட பொதுக்கழிப்பிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்)மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.02.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 09/2008 நாள்: 11.02.2008–ன் படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.41/2008, நாள்.20.2.2008ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.பி5/257/2008**
**ஆணையர் அவர்களின் 12.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.60/2008 பொருள் எண் .5

**பழுதடைந்த கான்கிரீட் கட்டடத்தை இடித்தல் மற்றும் திட்ட மதிப்பீடு**

வார்டு எண் : 66 மண்டலம் : 5

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் மற்றும் பணியின் பெயர் | கட்டடத்துறை – அண்ணாநகர் 'ஏபி' பிளாகில் 3வது பிரதான சாலை மற்றும் முதல் தெரு சந்திப்பில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள கான்கிரீட் கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக தரைதளம் கொண்ட 66வது வார்டு அலுவலகம் கட்டும் பணி. |
| இடிக்கப்படவேண்டிய கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1973 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | 1840 சதுர அடி |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.84,999/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை / மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.39.96 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2007–2008 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2007–2008 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | பின்னர் பெறப்படும். |

எனவே, மேற்கண்ட பழுதடைந்த நிலையில் உள்ள கான்கிரீட் கட்டடத்தை இடிப்பதற்கும் மற்றும் அவ்விடத்தில் இடிமானப்பணியுடன் புதியதாக தரைதளம் கொண்ட 66வது வார்டு அலுவலகம் கட்டும் பணிக்கு 2007–2008 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.39,96,000/– (ரூபாய் முப்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரம் மட்டும்)க்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.32/2008, நாள்.20.2.2008ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/0392/2008
ஆணையாளர் அவர்களின் 14.02.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.61/2008 பொருள் எண்.6

## ஓய்வூதியம்

சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் கூடுதல் வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31–12–2007 பி.ப. அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு. எஸ். சந்திரசேகரன், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடிதம்எண்.054/எ4/2008, நாள் 22–01–2008 சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01–01–2008 முதல் மாதம் | ரூ. 9563/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ. 3,50,000/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ. 3187/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ. 6376/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ. 4,00,032/– |
| ஓய்வூதியரின் காலத்திற்குப் பின்னர் அன்னாரது மனைவி திருமதி. சி. பச்சையம்மாள், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ. 9563/– 25–12–.2015 வரை<br>ரூ. 5738/–26–12–2015 முதல் |

37 ஆண்டுகள் 07 மாதங்கள் 10 நாட்க ள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ. 87,500/– |
| சிறப்பு சேமநல நிதியில் கூடுதலாக வழங்கப்பட்ட அரசு பங்கு தொகை பிடித்தம் | ரூ. 5,000/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 1(பி) வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்படவேண்டும்

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/22580/2007**
**ஆணையாளர் அவர்களின் 14.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.62/2008 பொருள் எண்.7

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 28–02–2006 பி.ப. அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு. டி. ராமமூர்த்தி அவர்களுக்கு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை சான்று நி.மு.எண்.543/எ4/2005, நாள் 31.10.2005–ன்படி மன்றத் தீர்மானம் பெற்று ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி4/35638/2005, நாள் 10.02.2006ல் முழு ஓய்வூதியப் பயன்களாக, ஓய்வூதியம் ரூ.5348/–ம், பணிக்கொடை தொகை ரூ.2,90,895/–ம், தொகுப்புத் தொகை ரூ.2,23,677/–ம், அன்னார் பணியாற்றிய காலத்தில் சென்னை மாநகராட்சிக்கு இழைப்பீடு இருப்பது பின்னர் தெரியவந்தால், அத்தகைய தொகையினை தனியரது ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து முன்னறிவிப்பின்றி பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, .மு.எண்.3208/எ4/2006, நாள் 27.07.2006ல் தனியருக்கு ஓய்வூதியப் பயன்கள் திருத்தியமைத்து சான்றளிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் ரூ. 8022/– ஏற்கனவே அனுமதித்த ஓய்வூதியம் ரூ. 5348/– நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் பணிக்கொடை ரூ. 3,21,932/– ஏற்கனவே அனுமதித்த இறப்பு மற்றும் பணிக்கொடை ரூ. 2,90,895/– நேர் செய்து மீதம் ரூ. 31,037/– வழங்கவும், தொகுப்பு தொகை ரூ. 3,35,641/– ஏற்கனவே அனுமதித்த ரூ. 2,23,677/–யை நேர் செய்து மீதம் ரூ. 1,11,964/– வழங்கவும் சான்று அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை தனியருக்கு தீர்வு செய்யும் முன்பே மேலும் உள்ளாட்சி நிதித் தணிக்கை நி.மு.எண். 2805/எ4/2007, நாள் 13–08–2007–ல் கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை திருத்தியமைத்து சான்று அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01–01–2008 முதல் மாதம் | ரூ. 8063/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ. 3,29,918/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ. 3,37,272/– |
| ஓய்வூதியரின் காலத்திற்குப் பின்னர் அன்னாரது மனைவி திருமதி. ஆர்.ரேவதி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ. 9563/– 25–12–.2015 வரை<br>ரூ. 5738/–26–12–2015 முதல் |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் அளிக்க மன்றத்தின் அனுமதி பெற்றப்படவேண்டும்.

எனவே, ஓய்வுபெற்ற உதவி வருவாய் அலுவலர், திரு. டி. ராமமூர்த்தி அவர்களுக்கு தணிக்கை சான்று நி.மு.எண்.2805/எ4/2007, நாள் 13.08.2007ன்படி திருத்திய ஓய்வூதியப் பயன்களாக ஓய்வூதியம் மாதம் ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் ரூ.5348/–லிருந்து ரூ.8063/– ஆகவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை தொகை ரூ.3,29,918/–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.2,90,895/–ஐ நேர் செய்து மீதத் தொகை ரூ.39,023/– (ரூபாய் முப்பத்தி ஒன்பதாயிரத்து இருபத்தி மூன்று மட்டும்) மற்றும் தொகுப்புத் தொகை ரூ.3,37,272/–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.2,23,677/– நேர் செய்து மீதத் தொகை ரூ.1,13,595/– (ரூபாய் ஒரு லட்சத்து பதிமூவாயிரத்து ஐநூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்) வழங்க மன்றத்தி அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/0366/2008**
**ஆணையாளர் அவர்களின் 01.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.63/2008 பொருள் எண்.8

**ஓய்வூதியம்**

திரு. டாக்டர் ஜெயசீலன் தாமஸ், மருத்துவ அலுவலர், ஆக சுகாதாரத்துறை, மண்டலம்–3ல் பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து 30.04.2006 முதல் ஓய்வு பெற்றார்.

31.05.2007 நாளிட்ட ஆணையரது செயல்முறை ஆணையின்படி கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்கள் 20.06.2007 அன்று வழங்கப்பட்டது.

ஓய்வூதியம் மாதம் ரூ.6,634/– 01.05.2006 முதல் வழங்கப்படுகிறது. இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை ரூ.3,50,000/–ல் மிகை ஊதியம் ரூ.5,375/– மற்றும் தணிக்கைத்தடை காரணமாக 25 % தொகை ரூ.87,500/– பிடித்தம் செய்து மீதம் ரூ.2,57,125/– மட்டும் வழங்கப்பட்டது. தொகுப்புத்தொகை ரூ.2,77,525/– வழங்கப்பட்டது.

27.04.2006 நாளிட்ட தணிக்கைச் சான்றில் அன்னாருக்கு திருத்திய ஓய்வூதியப் பயன்கள் கீழ்க்கண்டவாறு வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது.

திருத்திய ஓய்வூதியம் ரூ.10,425/– 01.05.2006 முதல் வழங்கவும், திருத்திய தொகுப்புத் தொகை ரூ.4,36,182/–ல் ஏற்கனவே அனுமதித்த ரூ.2,77,525/– போக மீதம் ரூ.1,58,657/– வழங்கவும் சான்று பெறப்பட்டுள்ளது. மேலும் இவரது திருத்திய ஓய்வூதிய தொகை ரூ.10,425/–ல் ரூ.3,475/– தொகுப்பு செய்துள்ளதால் இவருக்கு தொகுப்புத் தொகை வழங்கிய பிறகு திருத்திய ஓய்வூதியம் ரூ.6,950/– ஆக குறைக்கப்பட வேண்டும்.

இவர் சென்னை மாநகராட்சி 2வது வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால் திரு. டாக்டர் ஜெயசீலன் தாமஸ், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–3, அவர்களுக்கு 01.05.2006 முதல் திருத்திய ஓய்வூதியமாக மாதம் ரூ.10,425/–ல் ஏற்கனவே வழங்கிய ரூ.6,634/–ல் இருந்து அதிகரித்து வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.4,36,182/–ல் ஏற்கனவே அனுமதித்த தொகை ரூ.2,77,525/– போக மீதம் ரூ.1,58,657/–மட்டும் வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.10,425/–ல் இருந்து ரூ.6,950/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்கு பின் அன்னாரது மனைவி திருமதி.ஜே.சுசீலா, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,425/– 01.04.2013 முடிய ரூ.6,255/– 02.04.2013 முதல் வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/21335/2007**
**ஆணையாளர் அவர்களின் 14.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.64/2008 பொருள் எண்.9

**ஓய்வூதியம்**

திருமதி.எல்.குமாரி பவானி, மருத்துவ அலுவலர், குடும்பநலத்துறை, சஞ்சீவராயன் பேட்டை மண்டலம், அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 31.12.2006 பி.ப. முதல் ஓய்வு பெற்றார். தனியர் 22 வருடங்கள் 04 நாட்கள் (அ) 44 அரை ஆண்டுகள் தகுதிப் பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.1660/எ4/2007, நாள்.25.06.2007 சான்றின்படி 31.12.2006 பி.ப. முதல் ஓய்வு பெற்று ஓய்வூதியமாக மாதம் ரூ.7137/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,75,220/–ம் மற்றும் மாத ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,379/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,98,613/– பெறவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் குடும்ப ஓய்வூதியமாக அன்னாரது கணவர் திரு. எம்.ஜி.தணிகைமணி அவர்களுக்கு ரூ.5839/– வழங்கவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திருமதி.எல். குமாரி பவானி, மருத்துவ அலுவலர், குடும்பநலத்துறை, சஞ்சீவராயன் பேட்டை மண்டலம், அவர்களுக்கு 31.12.2006 பி.ப. முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.7137/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,75,220/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.68,805/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,06,415/– மட்டும் வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,379/–ஐ (ரூபாய் இரண்டாயிரத்தி முன்னூற்றி ஏழுபத்தி ஒன்பது மட்டும்) தொகுத்து பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,98,613/– ( ரூபாய் இரண்டு இலட்சத்தி தொண்ணூத்தி எட்டாயிரத்து அறுநூற்றி பதிமூன்று மட்டும்) வழங்கவும், தொகுத்து பெறுவதால், அவரது ஓய்வூதியம் ரூ.7137/–லிருந்து ரூ.4758/–ஆக குறைத்து வழங்கவும், குடும்ப ஓய்வூதியராக அன்னாரது கணவர் திரு. எம்.ஜி. தணிகைமணி, அவர்களுக்கு 01.12.2013 முதல் ரூ.5839/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/0610/2008**
**ஆணையாளர் அவர்களின் 14.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.65/2008 பொருள் எண்.10

**ஓய்வூதியம்**

டாக்டர். ந. ராஜகோபால், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–3, அவர்கள் தன்விருப்ப ஓய்வு காரணமாக 31.01.2007 பி.ப. முதல் ஓய்வு பெற்றார். தனியர் 24 வருடங்கள் 2மாதங்கள் 21 நாட்கள் தகுதிப் பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.028/எ4/2008, நாள்.22.01.2008 சான்றின்படி 01.02.2007 முதல் தன் விருப்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.7696/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,11,652/– மற்றும் மாத ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,565/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,31,808/– பெறவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி. டாக்டர். ஆர். இந்திராணி அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக ரூ.5772/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர்.ந. ராஜகோபால், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–3, அவர்களுக்கு 01.02.2007 முதல் தன்விருப்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.7696/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,11,652/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.77,913/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,33,739/– மட்டும் வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,565/–ஐ (ரூபாய் இரண்டாயிரத்தி ஐநூற்றி அறுபத்தி ஐந்து மட்டும்) தொகுத்து பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,31,808/– ( ரூபாய் மூன்று இலட்சத்தி முப்பத்தி முன்றாயிரத்து எண்ணூற்றி எட்டு மட்டும்) வழங்கவும், தொகுத்து பெறுவதால், அவரது ஓய்வூதியம் ரூ.7696/–லிருந்து ரூ.5130/–ஆக குறைத்து வழங்கவும், குடும்ப ஓய்வூதியமாக அன்னாரது மனைவி திருமதி. டாக்டர். ஆர். இந்திராணி, அவர்களுக்கு ரூ.5772/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி10/506/2008**
**ஆணையாளர் அவர்களின் 06.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.66/2008 பொருள் எண்.11

**ஓய்வூதியம்**

திரு.வி.முரளி, செயற்பொறியாளர், மண்டலம்–5, வயது முதிர்வு ஓய்வு காரணமாக பணியிலிருந்து 30.11.2005 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். தனியர் 36 வருடங்கள், 5 மாதங்கள் 8 நாட்கள் தகுதிப் பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி10/23998/07, நாள்.12.12.2007ன்படி ஓய்வூதியமாக மாதம் ரூ.5623/– மற்றும் பணிக்கொடைத் தொகை ரூ.3,05,778/– மற்றும் தொகுப்புத் தொகை ரூ.2,35,225/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, கடிதம் நி.மு.எண்.89/எ4/2008, நாள்.25.01.2008 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியப் பயன்கள் விவரம் பின்வருமாறு:

| | ஓய்வூதிய பயன் |
|---|---|
| ஓய்வூதியம் 01.12.2005 முதல் மாதம் | ரூ.6138/– |
| பணிக்கொடை | ரூ.3,38,234/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2,046/– |
| குறைக்கக்ப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4,092/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,56,814/– |
| குடும்ப ஓய்வூதியம் (மனைவி திருமதி.வி.சுஜாதா) | ரூ.6138/– (19.11.2012 முடிய)<br>ரூ.3683/– (20.11.2012 முதல்) |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.வி. முரளி, 30.11.2005 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற செயற் பொறியாளர், மண்டலம்–5, அவர்களுக்கு, தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக ஏற்கனவே, வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.5623/– லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.6138/– ஆக வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,38,234/– (ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து இருநூற்று முப்பத்தி நான்கு மட்டும்) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிக்கொடை ரூ.3,05,778/–யை நேர் செய்து மீதம் ரூ.32,456/–ல் தணிக்கைத்தடை காரணமான 25 விழுக்காடு ரூ.8,114/– பிடித்தம் செய்து மீதத் தொகை ரூ.24,342/– (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தி இரண்டு மட்டும்) வழங்கவும், மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2046/–ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,56,814/– ( ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து எண்ணூற்று பதிநான்கு மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத் தொகை ரூ.2,35,225/– சரிசெய்து மீதத் தொகை ரூ.21,589/– (ரூபாய் இருபத்தி ஓராயிரத்து ஐநூற்று எண்பத்தி ஒன்பது மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால், அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.6138/–லிருந்து ரூ.4092/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.சுஜாதா, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.6138/– 19.11.2012 வரையிலும் அதன் பின்னர் 20.11.2012 முதல் ரூ.3683/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி10/388/2008

ஆணையாளர் அவர்களின் 06.02.2008 நாளிட்ட குறிப்பு

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.67/2008 பொருள் எண்.12

**ஓய்வூதியம்**

திரு.எஸ். திருநாவுக்கரசு, உதவி செயற் பொறியாளர், மழைநீர் வடிகால் துறை அவர்கள், வயது முதிர்வு ஓய்வு காரணமாக பணியிலிருந்து 28.02.2005 முதல் ஓய்வு பெற்றார். தனியர் 35 வருடங்கள், 9மாதங்கள் 20 நாட்கள் தகுதிப் பணி புரிந்த அன்னாருக்கு மன்றத் தீர்மான எண்.421/05 நாள்.21.11.2005ன் படி, சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி10/24812/05, நாள்.25.11.2007ன் மூலம் ஓய்வூதியமாக மாதம் ரூ.3080/– மற்றும் பணிக்கொடைத் தொகை ரூ.1,65,368/– வழங்கப்பட்டுள்ளது. தொகுப்புத் தொகை வழங்கப்படவில்லை. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, கடிதம் நி.மு.எண்.4444/எ4/2007, நாள்.21.01.2008 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியப் பயன்கள் விவரம் பின்வருமாறு:

| | ஓய்வூதிய பயன் |
|---|---|
| ஓய்வூதியம் 01.03.2005 முதல் மாதம் | ரூ.4963/– |
| பணிக்கொடை | ரூ.2,63,654/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.1,654/– |
| குறைக்கக்ப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.3309/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,07,610/– |
| குடும்ப ஓய்வூதியம் (மனைவி திருமதி. டி.விஜயகுமாரி) | ரூ.4963/– (29.02.2012 முடிய)<br>ரூ.2978/– (01.03.2012 முதல்) |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.எஸ். திருநாவுக்கரசு, 28.02.2005 முதல் ஓய்வு பெற்ற உதவி செயற் பொறியாளர், மழைநீர் வடிகால் துறை அவர்களுக்கு, தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக ஏற்கனவே, வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.3080/– லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.4963/– ஆக வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,63,654/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்து ஆறுநூற்று ஐம்பத்தி நான்கு மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட பணிக்கொடை ரூ.1,65,368/– மற்றும் தணிக்கைத்தடைகள் காரணமாக பிடித்தம் செய்ய வேண்டிய 25 விழுக்காடு தொகை ரூ.65,914/– (ரூபாய் அறுபத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதிநான்கு மட்டும்) ஆக மொத்தம் ரூ.2,31,282/– நேர் செய்து மீதத் தொகை ரூ.32,372/– (ரூபாய் முப்பத்தி இரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்தி இரண்டு மட்டும்) வழங்கவும், மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1654/–ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,07,610/– ( ரூபாய் இரண்டு லட்சத்து எழாயிரத்து ஆறுநூற்று பத்து மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால், அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.4963/–லிருந்து ரூ.3309/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி. டி.விஜயகுமாரி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.4963/– 29.02.2012 வரையிலும் அதன் பின்னர் 01.03.2012 முதல் ரூ.2978/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.68/2008 பொருள் எண்.13

**ஓய்வூதியம்**

திரு.ஏ.சி.லஷ்மிநாராயணன், உதவி செயற் பொறியாளர், மண்டலம்—4, அவர்கள் வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 31.12.2006 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அவர் 33 வருடங்கள் 10 மாதங்கள் 02நாட்கள் தகுதிப்பணி புரிந்த அன்னாருக்கு 14.12.2006 நாளிட்ட தணிக்கைச் சான்றில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையினை நிவர்த்தி செய்ய காலதாமதம் ஆகும் என்பதால் தனியருக்கு சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி10/15142/2007, நாள்.31.05.2007ன்படி தற்காலிக ஓய்வூதியமாக ரூ.4556/— மற்றும் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.1,93,966/— வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3700/எ4/2007, நாள்.01.11.2007 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியம் விவரம் பின்வருமாறு:

| | திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| அ. வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் 01.01.2007 முதல் | ரூ.8025/— |
| ஆ. இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.3,41,633/— |
| இ. தொகுப்பு | ரூ.2675/— |
| ஈ. தொகுப்பு தொகை | ரூ.3,35,766/— |

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.ராதா அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8025/—ஐ 23.12.2013 முடியவும், அதன் பின்னர் 24.12.2013 முதல் ரூ.4815/— பெறவும் தகுதியுடையவராகின்றார்.

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.ஏ.சி.லஷ்மி நாராயணன், ஓய்வு பெற்ற உதவி செயற் பொறியாளர், மண்டலம்—4, அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக ரூ.8025/—ஐ ஏற்கனவே, வழங்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியமான ரூ.4556/—லிருந்து அதிகரித்து வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,41,633/— (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்தி ஓராயிரத்து ஆறுநூற்று முப்பத்தி மூன்று மட்டும்)ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக பணிக்கொடை ரூ.1,93,966/— மற்றும் தணிக்கை தடைகள் காரணமாக பிடித்தம் செய்ய வேண்டிய 25 விழுக்காடு பணிக்கொடை தொகை ரூ.85,408/— (ரூபாய் எண்பத்தி ஐந்தாயிரத்து நானூற்று எட்டு மட்டும்) ஆக மொத்தம் (ரூ.1,93,966/— + ரூ.85,408) ரூ.2,79,374/— போக மீதம் ரூ.62,259/— வழங்கவும், தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்த பிறகு 25 விழுக்காடு பிடித்தம் தொகையை மீள வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2675/—ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,35,766/— (ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்து ஏழுநூற்று அறுபத்தி ஆறு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.8025/—ல் லிருந்து ரூ.5350/— ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.ராதா அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8025/— 23.12.2013 வரையிலும் அதன் பின்னர் 24.12.2013 முதல் ரூ.4815/— வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.69/2008 பொருள் எண்.14

**ஓய்வூதியம்**

பாலங்கள் துறையில் உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்து 31–12–1994 பி.ப. முதல் வயது முதிர்வு ஒய்வு பெற்ற திரு.எம். பாலசுப்பிரமணியன், அவர்களுக்கு தணிக்கை துறை கடித எண் L.Dis. G2/9124/94, dated-23.12.1994ன் படி உதவி செயற் பொறியாளர் பதவியில் அரசின் உறுதியாக்கம் செய்யப்பட்ட பிறகே முழு ஒய்வூதியப்பயன்கள் வழங்க சான்று அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 13.01.95 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணையின்படி, தனியருக்கு 01.01.95 முதல் தற்காலிக ஒய்வூதியம் ரூ. 1199/– தற்காலிக ஒய்வூதிய இறப்பு மற்றும் ஒய்வுக்காலப் பணிக்கொடை ரூ. 43,065/– மற்றும் தற்காலிக தொகுப்பு தொகை ரூ. 50,082/– மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தணிக்கை சான்று நி.மு. எண். 3951/எ4/2007, நாள்– 20–11–2007 ன்படி கீழ்கண்டவாறு முழு ஒய்வூதியப்பயன்கள் வழங்க சான்று அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 01. | 01.01.95 முதல் ஒய்வூதியம் | ரூ. 1465/– |
| 02. | இறப்பு மற்றும் பணிக்கொடை | ரூ. 1,05,930/– |
| 03. | தொகுப்பு தொகை | ரூ. 61,254/– |

எனவே, 34 வருடங்கள் 05 மாதங்கள் 18 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த அன்னார் 2ஆம் வகுப்பு அலுவலர் என்பதால் மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகே ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படவேண்டும் 31.12.94 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வு பெற்ற திரு. எம். பாலசுப்பிரமணியன், உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கு ஓய்வூதியம் ரூ.1465/01–01–1995 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தற்காலிக ஒய்வூதியம் தொகை ரூ. 1199/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஒய்வுக்காலப் பணிக்கொடை ரூ. 1,05,930/–ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 43,065 /–ஐ நேர்செய்து மீதம் தொகை ரூ. 62,865/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.61,254/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.50,082/– ஐ நேர் செய்து மீதம் ரூ.11,172/– தொகை வழங்கவும் அன்னார் ஓய்வூதியத்தில் ரூ.488/– தொகுப்பு செய்வதால் அன்னாரது ஓய்வூதியம் ரூ.1465/–லிருந்து ரூ.977/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.பி. குப்பம்மாள், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ. 1275/– வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி10/23376/2007

ஆணையாளர் அவர்களின் 15.02.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.70/2008 பொருள் எண்.15

ஓய்வூதியம்

திரு. ஏ.பி. பிச்சுமணி, உதவி செயற் பொறியாளர், மழைநீர் வடிகால் துறை, வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 28.02.1999 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அவர் 37 வருடங்கள் 02 மாதங்கள் 22நாட்கள் தகுதிப்பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி10/11273/1999, நாள்.30.04.1999ன்படி தற்காலிக ஓய்வூதியமாக ரூ.3413/– மற்றும் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.1,12,613/– தொகுப்புத் தொகை ரூ. 1,71,335/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.1737/எ4/2007, நாள்.26.09.2007 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் விவரம் பின்வருமாறு:

| | திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| அ. வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் (01.03.1999 முதல்) | ரூ.4688/– |
| ஆ. இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,04,188/– |
| இ. தொகுப்பு | ரூ.1875/– |
| ஈ. தொகுப்பு தொகை | ரூ.2,35,350/– |

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி. பி. தனலட்சுமி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.4688/–ஐ 14.02.2006 முடியவும், அதன் பின்னர் 15.02.2006 முதல் ரூ.2813/– பெறவும் தகுதியுடையவராகின்றார்.

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.ஏ.பி. பிச்சுமணி, ஓய்வு பெற்ற உதவி செயற் பொறியாளர், மழைநீர் வடிகால் துறை, அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக ரூ.4688/–ஐ ஏற்கனவே, வழங்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியமான ரூ.3413/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,04,188/– (ரூபாய் இரண்டு லட்சத்து நான்காயிரத்து நூற்று எண்பத்தி எட்டு மட்டும்)ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக பணிக்கொடை ரூ.1,12,613/– மற்றும் தணிக்கை தடைகள் காரணமாக பிடித்தம் செய்ய வேண்டிய 25 விழுக்காடு பணிக்கொடை தொகை ரூ.51,047/– (ரூபாய் ஐம்பத்தி ஓராயிரத்து நாற்பத்தி ஏழு மட்டும்) மற்றும் ஊதிய உயர்வு நிறுத்தம் செய்த ஆணைப்படி பிடித்தம் ரூ.5,556/–ஆக மொத்தம் (ரூ.1,12,613/– + ரூ.51,047 + 5556/–) ஆக மொத்தம் ரூ.1,69,216/– போக மீதம் (ரூ.2,04,188/– ரூ.1,69,216/–) ரூ.34,972/– வழங்கவும், தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்த பிறகு 25 விழுக்காடு பிடித்தம் தொகையை மீள வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1875/–ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,35,350/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்து முன்னூற்று ஐம்பது மட்டும்)ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.1,71,335/–யை நேர்செய்து மீதம் ரூ.6405/– வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.4688/–ல் லிருந்து ரூ.2813/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி. பி. தனலட்சுமி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.4688/– 14.02.2006 வரையிலும் அதன் பின்னர் 15.02.2006 முதல் ரூ.2813/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி2/0607/2008
ஆணையாளர் அவர்களின் 14.02.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.71/2008 பொருள் எண்.16

ஓய்வூதியம்

திரு.எம். தாண்டவமூர்த்தி, உதவி செயற்பொறியாளர், பணித்துறை, அவர்கள் கடந்த 30.04.1993 பி.ப. முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.029/எ4/2008 நாள்.18.01.2008ல் அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.1132லிருந்து ரூ.1586/– ஆகவும், 01.05.1993 முதல் 31.12.1995 வரையிலும் 01.01.1996 முதல் ரூ.3425/–லிருந்து ரூ.4778ஆகவும் நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.53,336/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.37,333/–ஐ நேர் செய்து மீதம் தொகை ரூ.16,003/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.66,275/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.47,322/–ஐ நேர் செய்து மீதம் தொகையான ரூ.18,953/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி. டி. சுந்தரி என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.3284/– வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 18.01.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.05.1993 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.4.ந.க.எண்.அ3/8302/2006**
**ஆணையாளர் அவர்களின் 21.01.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.72/2008 பொருள் எண்.17

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திருமதி.கோ.காஞ்சனலட்சுமி, முதுநிலை பூச்சியியல் வல்லுனர், சுகாதாரத்துறை, மண்டலம்–4, அவர்கள் இரண்டாம் நிலை அலுவலராக இருப்பதால் 31.01.2007 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல மாமன்றத்தின் பின்னேற்புக்கு உட்பட்டு ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இவர் சென்னை மாநகராட்சியில் அடிப்படை சுகாதார பணியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, 05.04.1973 முதல் பணிபுரிந்துள்ளார். பின்னர் உதவி பூச்சியியல் வல்லுநராக பதவி உயர்வு பெற்று 02.04.1982 முதலும் அதன் பின்னர் முதுநிலை பூச்சியில் வல்லுநராக பதவி உயர்வு பெற்று 11.11.1996 முதலும் பணிபுரிந்துள்ளார். இவர் 30 ஆண்டுகளுக்கு மேலாக எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கையின்றியும், சம்பளமில்லா விடுப்பு எதுவும் துய்க்காமலும் பணி புரிந்துள்ளார். மேற்கண்ட பதவிகளில் தகுதிகாண் பருவம் மற்றும் பணிவரன் முறைப்படுத்தியும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவரது தாய்மொழி தெலுங்கு. இருப்பினும் இவர் சென்னை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பில் தமிழ் மொழியில் தேர்வு எழுதி 1980ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என்று கூட்டுறவு சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். மேலும் விழிப்புக்குழுமத்தில் தனியர் மீது இது நாள்வரை விசாரணை ஏதும் இல்லை என்று விழிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தனியர் மண்டலம்.8ல் பணிபுரிந்த காலத்தில் அவர் மீது தணிக்கைத்தடை இருப்பதாக மண்டல அலுவலர்–8 அவர்கள் தெரிவித்துள்ளார். சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் உதவி பூச்சியியல் வல்லுனராக 02.01.1982 முதல் 1988 வரை பணிபுரிந்த காலத்தில் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை ஏதுமில்லை என்று தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் (பொ) அவர்கள் தெரிவித்துள்ளார். இவர் மண்டலம்–4ல் பணிபுரிந்த காலத்தில் 2000–01 மற்றும் 2001–02ம் நிதியாண்டில் தணிக்கைத்தடை ஏதுமில்லை என்றும், 2002–03ம் நிதியாண்டில் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை இருப்பதாக தெரிவித்துள்ளதால், அத்தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்யக் கோரி தனியருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டது. இத்தணிக்கைத் தடை குறித்து அதற்குண்டான தொகையை தன்னுடைய ஓய்வூதிய பணிக்கொடையில் பிடித்தம் செய்து கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

மேலும், மண்டலம்–4லும், துறை மூலமாகவும், அன்னார் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்று சான்றளிக்கப்படுகிறது.

திருமதி.கே.காஞ்சனலட்சுமி, முதுநிலை பூச்சியியல் வல்லுநர், மண்டலம்–4, அவர்களை, தணிக்கைத் தடை காரணமாக சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிதி இழப்பீடுகள் மற்றும் முன்பணம் நிலுவைத் தொகைகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றுக்கு அவரை பொறுப்பாக்கியும், அத்தொகை அவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் அவரை 31.01.2007 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து, சென்னை மமாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, திருமதி.கே.காஞ்சனலட்சுமி, முதுநிலை பூச்சியியல் வல்லுநர், மண்டலம்–4, அவர்களை, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.01.2007 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்து, பணியிலிருந்து விடுவித்ததற்கு நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/01267/2007
ஆணையாளர் அவர்களின் 08.01.2008 நாளிட்ட குறிப்பு

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.73/2008 பொருள் எண்.18

**பணியமைப்பு–தேர்வுநிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் (திருமதி) கே.புனிதவள்ளி, மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர்.(திருமதி) கே.புனிதவள்ளி, மருத்துவ அலுவலராக 29.01.1996 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.474, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வாங்கல் துறை (மா.ந–3) நாள். 26.09.2001ன் படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 29.01.1998 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத் திட்டம் அவர்கள் டாக்டர் (திருமதி) கே.புனிதவள்ளி, மருத்துவ அலுவலர் 29.01.2006 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை 11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் 9100–275–14050 நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது விழிப்பு குழுமத்தில் துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள்/ பணிவரன்முறை செய்த நாள் | தகுதி காண்பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் |
|---|---|---|---|---|
| 01 | டாக்டர்.திருமதி கே.புனிதவள்ளி | 29.01.1996 | 29.01.1998 | இல்லை |

| 10 ஆண்டு பணியை முடித்த நாள் | பிந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | தேர்வுநிலை ஊதியம் பெற தகுதியுடையவரா | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 28.01.2006 | ஏதுமில்லை | – | ஆம் | 29.01.2006 |

டாக்டர்.(திருமதி) கே.புனிதவள்ளி, மருத்துவ அலுவலருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர்.(திருமதி) கே.புனிதவள்ளி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 28.01.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 29.01.2006 முதல் அடிப்படை சம்பளம் 11025+225 சிறப்பு ஊதியம் என்ற காலமுறை தேர்வுநிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/0189/06
ஆணையாளர் அவர்களின் 08.01.2008 நாளிட்ட குறிப்பு

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.74/2008 பொருள் எண்.19

**வெளிநாடு செல்ல கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, சி.எஸ்.நகர் நலவாழ்வு மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் திருமதி.எஸ்.சுரேகா என்பவர் அமெரிக்க நாட்டிற்கு தன்னுடைய சகோதரனை காண்பதற்காக பயணம் செல்லவிருப்பதால் கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மை சான்றிதழ் அளிக்க கோரியுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 04.01.1995 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியினை அரசாணை எண்.474 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.09.2001ன்படி மருத்துவ அலுவலர் பதவியில் வரன்முறைப்படுத்தி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தனியர் தகுதிகாண் பருவம் முடித்தவராக மன்ற தீர்மான எண்.392, நாள்.31.08.2006ஐ தொடர்ந்து தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்துறையில் தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்பு பணி அலுவலகத்திலிருந்து இது போன்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இவர் வெளிநாடு செல்லும்பொருட்டு பாதுகாப்பு குற்றப்புலனாய்வு மற்றும் சிறப்பு விழிப்புத்துறை அனுமதி வழங்கலாம் என சான்று கடிதம் பெறப்பட்டுள்ளது. மேலும், மாநில விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்திலிருந்து இது போன்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. அரசு பணியாளர்கள் அயல்நாடு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு கடைபிடித்தொழுகும் நிபந்தனைகளை கடைபிடித்து இவருக்கு தடையின்மை சான்றிதழ் வழங்கலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், தனியர் மேலைநாடு செல்ல மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.288, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.04.12.1997ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

1. வெளிநாடு செல்ல இருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.
2. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனம் போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
3. வெளிநாடு செல்லும் பணச்செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4. அவர் வெளிநாட்டில் இருக்கும்போது சென்னை மாநகராட்சியின் பணியைத் துறக்க விண்ணப்பிக்ககூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டது.
5. வெளிநாடு செல்வதற்கு முன்பு தனியருக்கு தகுதியுள்ள விடுப்புகள் துய்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்து அவ்விடுப்பு அனுமதி அளித்தபிறகே அவர் வெளிநாடு செல்ல வேண்டும்.
6. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 26.03.2007 தேதியிட்டு கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று வழங்கப்பட்டது.

எனவே, டாக்டர் திருமதி.எஸ்.சுரேகா, மருத்துவ அலுவலர் என்பவர் வெளிநாடு செல்ல கடவுச்சீட்டுபெறுவதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/2026/2007**
**ஆணையாளர் அவர்களின் 07.01.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.75/2008 பொருள் எண். 20

**வெளிநாடு செல்ல தடையின்மை சான்று வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, வடபழனி மண்டலத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர்.திருமதி.நந்தினி கமலக்கண்ணன் அவர்கள் 19.06.2004 முதல் 10.07.2004 வரை ஈட்டிய விடுப்பில் ஐரோப்பா நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ஆணையாளர் அவர்கள் அனுமதி வழங்கினார்கள். தனியர் அவர்கள் மேற்கூறப்பட்ட காலத்தில் பயணம் மேற்கொண்டார்கள். மேலும் 2004ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கடவுச்சீட்டு புதுப்பித்துள்ளார். தற்போது 10.12.2007 முதல் 23.12.2007 வரை ஈட்டிய விடுப்பில் ஆஸ்திரேலியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ஆணையர் அவர்கள் அனுமதி வழங்கினார்கள்.

டாக்டர்.திருமதி.நந்தினி கமலக்கண்ணன் அவர்கள் 22.05.1986 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இவரது தற்காலிக நியமனம் அரசாணை எண்.1279 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்.25.09.1991ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டது. தனியர் 18.07.1988 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இத்துறையில் தனியர் மீது எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்பு பணி அலுவலகத்திலிருந்தும் விசாரணை ஏதுமில்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவர் வெளிநாடு செல்லும் பொருட்டு பாதுகாப்பு குற்ற புலானாய்வு மற்றும் சிறப்பு விழிப்புத்துறையிலிருந்து தடையின்மை சான்று கடிதம் பெறப்பட்டுள்ளது.

அரசு பணியாளர்கள் அயல்நாடு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு கடைபிடித்தொழுகும் நிபந்தனைகளை கடைபிடித்து தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலரின் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் மேலை நாடு சென்றதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. நந்தினி கமலக்கண்ணன், மருத்துவ அலுவலர் வடபழனி மண்டலம் அவர்கள் 19.06.2004 முதல் 10.07.2004 வரை ஈட்டிய விடுப்பில் ஐரோப்பா நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டதற்கும் 2004ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கடவுச்சீட்டை புதுப்பித்ததற்கும், 10.12.2007 முதல் 23.12.2007 வரை ஈட்டிய விடுப்பில் ஆஸ்திரேலியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்15/3202/2003
ஆணையாளர் அவர்களின் 12.12.2007 நாளிட்ட குறிப்பு

## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.76/2008 பொருள் எண்.21

### பணி நீக்க காலம் நீட்டித்தமைக்கு அரசின் அனுமதி வேண்டுதல்

மாவட்ட குடும்ப நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அயனாவரம் மண்டலத்தில் தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக பணிபுரியும் திரு.எஸ்.ராஜூ அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்த போது 31.03.2003 முதல் முன்னனுமதி இல்லாமல் அடிக்கடி விடுப்பு துய்த்ததற்கு மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்களால் பலமுறை எச்சரிக்கப்பட்டும் 04.11.2003 முதல் தொடர்ந்து முன் அறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை, எனவே, 18.11.2003 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார்.

தனியர் மீது சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டது.

அன்னார் முன்னனுமதியின்றி கீழ்கண்ட நாட்களுக்கு பணிக்கு வரவில்லை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31.03.2003 | முதல் | 20.04.2003 | வரை | மருத்துவ விடுப்பு | 21 | நாட்கள் |
| 02.05.2003 | „ | 27.05.2003 | „ | ஈட்டிய விடுப்பு | 25 | „ |
| 02.06.2003 | „ | 11.06.2003 | „ | ஈட்டிய விடுப்பு | 10 | „ |
| 30.06.2003 | „ | 21.07.2003 | „ | ஈட்டிய விடுப்பு | 22 | „ |
| 29.08.2003 | „ | 03.09.2003 | „ | மருத்துவ விடுப்பு | 06 | „ |
| 08.09.2003 | „ | 16.09.2003 | „ | மருத்துவ விடுப்பு | 09 | „ |
| 29.09.2003 | „ | 30.09.2003 | „ | சம்பளமில்லா விடுப்பு | 02 | „ |
| 15.10.2003 | „ | 16.10.2003 | „ | „ | 02 | „ |
| 22.10.2003 | „ | 28.10.2003 | „ | „ | 07 | „ |
| | | | | | 104 | |

இதன் மூலம் அலுவலக பணிக்கு குந்தகம் விளைவித்தது.

1. மேலும் இவர் 04.11.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. இதனால் அலுவலக விதியை மீறியதோடு பணிக்கு குந்தகம் விளைவித்தது.
2. முன்னறிவிப்பின்றி வேலைக்கு வராமல் இருப்பதை வாடிக்கையாக கொண்டிருப்பது
3. இவர் நாகம்மையார் நகர் நலவாழ்வு மையத்தில் பணிபுரிந்த போது அங்கு பணிபுரியும் அலுவலர்களுக்கு ஜனவரி 2003 மாதத்திற்கான ஊதியத்தை பெற்று தராததின் மூலம் பணியில் பொறுப்பற்ற தன்மை மற்றும் நிர்வாக நலனில் அக்கறையின்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணை தனியர் இவ்வலுவலகத்திற்கு தெரிவித்த வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்டு 15 நாட்களுக்குள் விளக்கம் கேட்கப்பட்டது. பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட இக்குற்றச்சாட்டு குறிப்பாணை தனியர் இம்முகவரியில் இல்லை என தெரிவித்து மீண்டும் இத்துறையில் பெறப்பட்டது. பின்னர் தனியர் 12.02.2004 அன்று இவ்வலுவலகத்திற்கு வந்து குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டார்.

**மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்15/3202/2003**

தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் ஏதும் அளிக்கவில்லை. இவரை விளக்கம் அளிக்கக் கோரியும், தவறும் பட்சத்தில் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளின் மீது இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்து மீண்டும் 18.03.2004 அன்று தனியருடைய முகவரிக்கு குறிப்பாணை அனுப்பப்பட்டும் தனியரிடமிருந்து விளக்கம் ஏதும் பெறப்படவில்லை.

ஒழுங்கு நடவடிக்கை நடைமுறையின்படி, இந்நேர்வில் விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டார். இவர் தனியரிடம் 08.06.2004 அன்று நேர்முக விசாரணை நடத்தி தனியர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிருபணமானதாக 28.06.2004 தேதியிட்ட தனது அறிக்கையை அளித்துள்ளார்.

இந்நேர்வின் மீது இறுதி முடிவு எடுக்கும் பொருட்டு விசாரணை அலுவலரின் அறிக்கையின் நகலுடன் 01.07.2004 தேதியிட்ட குறிப்பாணை தனியர் தெரிவித்த முகவரிக்கு அனுப்பப்பட்டு 15 நாட்களுக்குள் கூடுதல் விளக்கம் கேட்கப்பட்டது.

திரு.எஸ்.ராஜு, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் அவர்கள் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்களுக்கு அனுப்பியுள்ள 24.09.2004 தேதியிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லா காரணத்தால் (பெப்டிக் அல்சர்) தன்னால் பணிக்கு வர இயலவில்லை என்றும், இதன் காரணமாக தான் ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ சான்றிதழுடன் கூடிய மருத்துவ விடுப்பு எடுத்ததாகவும் இவ்விடுப்புகள் தன்னுடைய பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவித்து தன்னை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள கோரினார்.

தனியர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும் தனியரை மீண்டும் பணியில் சேரவும் 22.03.2005 அன்று உத்தரவிடப்பட்டது. இவ்வுத்தரவின்படி தனியர் 04.04.2005 அன்று மீண்டும் பணியில் சேர்ந்துள்ளார்.

இவர் தமக்கு வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்ய கோரி நியமனக்குழுவிற்கு மேல்முறையீடு செய்ததன் பொருட்டு இவரது மேல்முறையீட்டு மனு நியமனக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு நியமனக்குழு நிர்வாகம் தனியருக்கு வழங்கிய தண்டனையான மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்ததை உறுதி செய்து தீர்மான எண்.144/2006, நாள்.19.05.2006ன் மூலம் தீர்மானித்தது.

இத்தீர்மானத்தின்படி, தனியருக்கு நிர்வாகம் வழங்கிய மூன்றாண்டுகளுக்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ததை உறுதி செய்து சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு நாள்.12.07.2006ன் படி ஆணையிடப்பட்டு தனியருக்கு இவ்வாணை 26.07.2006 அன்று சார்பு செய்யப்பட்டது.

தனியர் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருந்த காலம் 16.05.2004 உடன் ஆறு மாதம் முடிவுற்றது. அரசாணையின்படி 6 மாதத்திற்கு மிகையாக தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் இனங்களுக்கு தற்காலிக பணி நீக்கத்தை நீட்டிக்க அரசின் ஆணை பெறவேண்டும். இந்நேர்வில் தனியரின் தற்காலிக பணிநீக்க காலம் 16.05.2004 முதல் 03.04.2005 வரை 6 மாதங்களுக்கு மேலாக நீட்டித்ததற்கு அரசின் பின்னேற்பு பெற அரசுக்கு 12.04.2007 அன்று கடிதம் அனுப்பப்பட்டதில், 08.05.2007 தேதியிட்ட அரசு கடிதத்தில் மேற்கண்ட பொருள் தொடர்பாக மன்ற அனுமதி பெற்று அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்குமாறு தொவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.எஸ்.ராஜு, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் அவர்கள் 16.05.2004 முதல் 03.04.2005 வரை 6 மாதங்களுக்கு மேலாக தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டதற்கு அரசின் பின்னேற்பு ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.77/2008 பொருள் எண்.22

**பணி நீக்க காலம் நீட்டித்தமைக்கு அரசின் அனுமதி வேண்டுதல்**

திரு. ஜி. விஸ்வநாதன், உதவியாளர், உதவி நல அலுவலகம் –1ல் பணிமாற்று அடிப்படையில் பணிபுரிந்து, அலுவலக பணம் ரூ.1,04,219/– கையாடல் தொடர்பாக 19.1.2002 முதல் 10.08.2005 வரை தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார். ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் வைத்து 11.08.2005 முதல் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டார்.

மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) துணை விதி எண். 9(2)ன் கீழ் கீழ்க்கண்ட குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| 01) | திரு. சுதர்சணன், மருத்துவ அலுவலர் | ஊதிய உயர்வு நிலுவை, தற்காலிக பணிநீக்க கால ஊதியம் | ரூ.33,685/– | பி.ப்பி.வி.எண்.ஏ000525, 23.10.2000 |
| 02) | திரு. சுதர்சணன், மருத்துவ அலுவலர் | ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புத்தொகை | ரூ.15,394/– | பி.ப்பி.வி.எண்.ஏ00012, 18.4.2001 |
| 03) | டாக்டர்.ரீட்டா ஞானவேந்தன், மருத்துவ அலுவலர் | ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புத்தொகை | ரூ.8,817/– | பி.ப்பி.வி.எண்.ஏ00098, 24.5.2001 |
| 04) | டாக்டர்.நந்திவர்மன் மருத்துவ அலுவலர் | சம்பளநிலுவை | ரூ.12,808/– ரு.23,229/– | பி.ப்பி.வி.எண்.ஏ000357, 28.8.2001 |
| 05) | டாக்டர்.நந்திவர்மன் மருத்துவ அலுவலர் | ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புத்தொகை | ரூ.6,960/– | பி.ப்பி.வி.எண்.ஏ000357, 28.8.2001 |
| 06) | பி.மூர்த்தி, சுகாதார ஆய்வாளர் | ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புத்தொகை | ரூ.10,165/– | பி.ப்பி.வி.எண்.ஏ000684, 18.12.2000 |
| 07) | இக்பால், அ.சு.ப | ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புத்தொகை | ரூ.2,469/– ரூ.1,13,527/– | பி.ப்பி.வி.எண்.ஏ000257, 25.7.2001 |
| 08) | | உதவி நல அலுவலர்–1 அவர்களின் கணக்கில் | ரூ.3,500/– | |
| | | மொத்தம் | ரூ.1,17,027/– | |

1. ஆக மொத்தம் ரூ.1,17,027/– தொகையினை சுகாதாரத் துறை பணியாளர்களுக்கு பட்டுவாடா செய்யவில்லை.
2. சி.டி.டி பாஸ் புத்தகம், இன்சூரன்ஸ் பணம் கட்டியதற்கான ரசீதுகள் ஒப்படைக்காமை,
3. உதவி நல அலுவலகம் –1 ல் காசோலை எண் 798841 புத்தகத்தில் இல்லை.
4. பணப்பட்டுவாடா பதிவேடு (2000–2001) மற்றும் (2001 – 2002) ஒப்படைக்கவில்லை.
5. கொடிநாள் ரசீது மற்றும் அதற்கான தொகை ஒப்படைக்கவில்லை.
6. அலுவலகப் பதிவேடுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் மற்றும் கோப்புகள் ஒப்படைக்கத்தவறியது. அலுவலக ஆவணங்களை உடனடியாக ஒப்படைக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டும் இதுநாள் வரை ஒப்படைக்கவில்லை.
7. மேற்கண்ட தங்கள் செயலால், சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் உருவாக்கியது பொறுப்பற்ற தன்மை மற்றும் மேலதிகாரிகளின் உத்திரவிற்கு கீழ்ப்படியாமை.

மேற்கண்ட குற்றக் குறிப்பாணைக்கு தனியர் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைகள் வழங்கப்பட்டுவிட்டது எனவும், ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்தில் தான் உள்ளது எனவும், தன் அலுவலக பீரோ மற்றும் மேஜை பூட்டு உடைக்கப்பட்டு புதிய பூட்டு இடப்படுவதற்கு முன் தனக்கு வாய்ப்பளித்திருந்தால் மட்டுமே தான் பொறுப் பேற்க இயலும் எனவும் தெரிவித்துள்ளார்.

<u>ம.அ.1.ந.க.எண்.அ6/6048/2001</u>

இந்நிகழ்வு தொடர்பாக தனியர் மீது குற்றவியல் வழக்கு எச்3, காவல் நிலையத்தில் தொடரப்பட்டது. தனியர் காவல் நிலைய ஆய்வாளர் மீது வழக்கு தொடர்ந்து உயர்நீதி மன்றத்தின் 5.12.2005 நாளிட்ட உத்திரவில், தவறான அபிப்பிராயத்தில் தொடரப்பட்டது என்பதால், ( சி.ஆர். எண். 781/2003 ) நிலுவையில் இவர் மீதுள்ள குற்றவியல் வழக்கினை ரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, பெறப்பட்ட விசாரணை அறிக்கையில், இவர் மீதான குற்றச் சாட்டுகள் சந்தர்ப்ப சூழ்நிலையில் ஏற்பட்டதாலும், தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் கையாடல் செய்த தொகையினை சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு, பணி நீக்க காலத்தில் இருந்த சமயத்தில் வெள்ளை தாளில் வருவாய் வில்லை ஒட்டி கையொப்பம் பெற்று திருப்பி செலுத்தியுள்ளார். தன்னிச்சையாக இவரது செய்கை காரணமாக இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், தனியரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவாக, தனியரின் ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்தும் தனியர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட காலமான 19.1.2002 முதல் 10.08.2005 வரை அடிப்படை விதி 18(2) னை தளர்வு செய்ய நியமனக்குழு மூலம் மன்ற ஒப்புதல் பெற்று அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பி தளர்வாணை பெற்றபின் வரன்முறைபடுத்தப்படும் என 5.12.2006 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

இதற்கிடையில் தனியர் தற்காலிக பணி நீக்க காலம் 6 மாதத்தினை கடந்துள்ளதால், பணி நீக்க காலத்தினை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து அரசின் பின்னேற்பு ஆணை (அரசாணை (பத்தாண்டு) 180 நாள் 13.6.2003 ) பெறப்பட்டது. இவ்வாணை பெறப்பட்ட 3 மாத காலத்திற்குள் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையினை முடிவுக்கு கொண்டு வருமாறும் தெரிவிக்கப்பட்டது.

தனியர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட காலமான 19.1.2002 முதல் 19.07.2002 வரை 6 மாதத்தினை கடந்துள்ளதால் 20.07.2002 முதல் மேலும் 6 மாத காலம் தற்காலிக பணி நீக்கத்தினை 19.1.2003 வரை நீட்டித்து அரசாணை பெறப்பட்டுள்ளது. 20.1.2003 முதல் 10.8.2005 வரை மேலும் தற்காலிக பணி நீக்கம் நீட்டிப்பு செய்யப்பட்டது.

எனவே 20.1.2003 முதல் 10.8.2005 வரை தற்காலிக பணிநீக்கக்காலம் நீடிக்கப்பட்டதற்கு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி, அரசு பின்னேற்பு ஆணை பெற்று வரன் முறைப்படுத்த நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.10.ந.க.எண்.ஆர்2/1609/2007
ஆணையாளர் அவர்களின் 08.09.2007 நாளிட்ட குறிப்பு

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.78/2008 பொருள் எண்.23

**பணியமைப்பு–கல்வி தகுதியில் தளர்வாணை வேண்டுதல்**

13.12.2004 நாளிட்ட பொதுத்துறையின் சுற்றறிக்கையின்படி திரு. பி. நாராயணசாமி, வரித்தண்டலர், மண்டலம்–10, அவர்கள் 30.06.2005 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார்.

தனியருக்கு ஓய்வுகால பணப்பயன்கள் அளிப்பதற்கு கருத்துரை வேண்டி உள்ளாட்சி நிதித்தணிக்கைக்கு கோப்பு அனுப்பப்பட்டது. தனியர் S.S.L.C. தேர்ச்சி பெறாத நிலையில் தனியருக்கு வரிவசூலிப்பவர் பணிநியமனம் செய்தமைக்கு அரசின் பின்னேற்பாணை பெற்ற பிறகே இவருக்கு ஓய்வூதியப் பயன்கள் அளிக்க இயலும் என்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் தனியர் அவர்கள் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டதின்பேரில் இது சம்பந்தமான வழக்கு வரும் 13.09.2007 அன்று இந்த லோக் அதாலத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.

இதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு திரு.பி.நாராயணசாமி, ஓய்வு பெற்ற வரித்தண்டலர், மண்டலம்–10, அவர்களுக்கு S.S.L.C.தேர்ச்சி பெறாத நிலையில் தனியருக்கு வரித்தண்டலர் பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு அரசின் பின்னேற்பு மற்றும் தளர்வாணை பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி பெற்ற பிறகே அரசிற்கு முன்மொழிவினை அனுப்ப இயலும்.

எனவே, திரு.பி.நாராயணசாமி, ஓய்வு பெற்ற வரித்தண்டலர், மண்டலம்–10, அவர்களுக்கு S.S.L.C.தேர்ச்சி பெறாத நிலையில் வரித்தண்டலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு அரசின் பின்னேற்பு மற்றும் தளர்வாணை பெறுவதற்கு ஏதுவாக மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/875/2008
ஆணையாளர் அவர்களின் 20.02.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.79/2008 பொருள் எண்.24

ஓய்வூதியம்

சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமம் துறையில் தலைமை கணக்கு அலுவலராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 29.02.2008 பி.ப. அன்று பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ள திருமதி. எஸ். ஜெயகுமாரி, என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடிதம்எண்.365/எ4/2008, நாள் 14.02.2008 சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01–03–2008 முதல் மாதம் | ரூ. 7650/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ. 3,50,000/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ. 2550/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ. 5100/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ. 3,20,076/– |
| ஓய்வூதியரின் காலத்திற்குப் பின்னர் அன்னாரது கணவர் திரு. எம்.சி.லக்ஷ்மணன், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ. 7650/– 09–02–.2015 முடிய<br>ரூ. 4590/–10–02–2015 முதல் |

35 ஆண்டுகள் 04 மாதங்கள் 02 நாட்க ள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ. 87,500/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 1(எ) வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்படவேண்டும்

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.80/2008 பொருள் எண்.25

**பணியமைப்பு – பணிவரன் முறைப்படுத்த அனுமதி**

08.09.2007 நாளிட்ட அரசாணை எண்.152ன்படி பின்வரும் அலுவலர்களுக்கு தலைமை கணக்கு அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு, பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. தலைமை கணக்கு அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட அலுவலர்கள் பணியில் சேர்ந்த நாள் விவரம் பின்வருமாறு;–

| வ.எண் | பெயர்<br>திருவாளர் /திருமதி | பதவி உயர்வு பெற்ற பதவி | தலைமை கணக்கு அலுவலராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 01 | கே. நம்மாள்வார் | தலைமை கணக்கு அலுவலர் (நிர்வாகம்) | 21.09.2007 |
| 02 | ச. ஜெயக்குமாரி | தலைமை கணக்கு அலுவலர் (வ (ம)செ) | 21.09.2007 |
| 03 | எஸ். சிவக்குமார் | தலைமை கணக்கு அலுவலர் (பொது) | 21.09.2007 |

மேற்கண்ட அலுவலர்கள் தலைமை கணக்கு அலுவலர்களாக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன் முறை செய்ய வேண்டியும், சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே பணிபுரிந்த தலைமை கணக்கு அலுவலர்கள் பெற்று வந்த ஊதிய விகிதமான ரூ.10000–325–15200 என்ற ஊதிய விகிதத்தை தற்போது பதவி உயர்வு பெற்ற மேற்கண்ட தலைமை கணக்கு அலுவலர்களுக்கும் நிர்ணயம் செய்யவும், அரசாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.81/2008 பொருள் எண்.26

### பணியமைப்பு

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் கூடுதல் சுகாதார அலுவலராக பணிபுரியும் டாக்டர்.பெ.குகானந்தம் என்பவர் ஆந்திர பிரதேச மாநிலத்திலுள்ள ஷேர் இந்தியா என்ற நிறுவனத்தின் பொது சுகாதார மேலாண்மை நிலையத்தில் திட்ட இயக்குநராக பணிபுரிய அழைப்பு வந்துள்ளதாகவும், இரண்டாண்டு காலத்திற்கு அயற்பணி மூலம் தன்னை அனுப்புமாறும் கோரியுள்ளார்.

டாக்டர் பெ.குகானந்தம் என்பவரது கோரிக்கை குறித்து 20.12.2007 அன்று நடைபெற்ற நியமனக்குழு கூட்டத்தில், இவ்வலுவலரது கோரிக்கை குறித்து முறையான பணியமைப்பின் கீழ் இவரின் மனுவினை மார்ச்–2008க்கு பின்னர் பரிசீலிக்கலாம் என நியமனக்குழு தீர்மானித்தது. (தீர்மான எண்.544/2007)

தனியரது கோரிக்கையின் அவசரத்தை கருத்தில் கொண்டு, மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், அரசாணைக்குட்பட்டும், 31.12.2007அன்று பி.ப. முதல் இவர் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, கூடுதல் சுகாதார அலுவலர் டாக்டர் பெ. குகானந்தம் அவர்கள் ஆந்திர பிரதேச மாநிலத்திலுள்ள ஷேர் இந்தியா என்ற நிறுவனத்தின் பொது சுகாதார மேலாண்மை நிலையத்தில் திட்ட இயக்குநராக பணிபுரிய 31.12.2007 அன்று பி.ப. முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவித்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், இவர் மேற்படி நிறுவனத்தில் அயற்பணியில் பணிபுரிய அரசாணை பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.(ம) ந.க.எண்.எம்5/1591/91

ஆணையாளர் அவர்களின் 02.01.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.82/2008 பொருள் எண்.27

பணியமைப்பு

திரு.வி.கணேசன், மலேரியா ஆய்வாளர், மண்டலம்–6, அவர்கள் தன் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களின் பெயரில் போலியாக விண்ணப்பித்து, பக்ரீத் முன்பணம் கையாடல் செய்தது தொடர்பாக அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3ம் மற்றும் 4ம் நிலை (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 9(2)ன் கீழ் முதல் நிகழ்வாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பின்னர் தனியர் 04.02.1997 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது தொடர்பாக சென்னை மாநகராட்சி 3ம் நிலை மற்றும் 4ம் நிலை (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 9(2)ன் கீழ் இரண்டாவது நிகழ்வாகவும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்விரண்டு நிகழ்வுகளான ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னதாக தனியர் 30.06.2007 அன்று வயது முதிர்வை எட்டியதால், அன்னாரை ஒய்வு பெற அனுமதிக்காமல் 30.06.1997 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதால், மேற்படி இரண்டு ஒழுங்கு நடவடிக்கை நிகழ்வுகளின் மீது இறுதி ஆணை வேண்டியும் தனியரை 30.06.1997 முதல் வயது முதிர்வு ஒய்வு பெற அனுமதிக்கவும், அரசு ஆணை வேண்டி கடிதம் அனுப்புவதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

11.05.2006 நாளிட்ட அரசு கடிதத்தில் மற்றொரு இது தொடர்பாக தமிழ்நாடு அரசால் சமீபத்தில் வழங்கப்பட்ட அறிவுரையில் வயது முதிர்வு ஒய்வு பெற வேண்டியவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு பணியிலிருந்து ஒய்வு பெற அனுமதிக்கப்பட வில்லை. தற்காலிக பணி நீக்கம் தொடரும் நிலையில் தனியர் பணியில் இருப்பதாகவே கருதப்பட வேண்டும். ஒய்வு பெற அனுமதிக்கப்படாத நிலையில் தனியர் மீது ஒய்வூதிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்க இயலாது. தனியர் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர் (ஒழுங்கு மேல் முறையீடு) விதிகளில் விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி சென்னை மாநகராட்சி ஆணையரே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்றவராகிறார் (விதி.6) என தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) அவர்களின் 28.06.2007 நாளிட்ட குறிப்பின்படி ஏற்கனவே பெறப்பட்ட மன்ற தீர்மானத்தை ரத்து செய்து மன்றத்திற்கு குறிப்பு மீள சமர்ப்பிக்க தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட நிகழ்வில் அரசின் ஆணை பெற தேவையில்லாததால் 15.05.2007 அன்று நடந்த நியமனக்குழுக் கூட்டத்தின் நடவடிக்கை சுருக்கம், பொருள் எண்.13, தீர்மான எண்.154/2007 மற்றும் 28.05.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை சுருக்கம், பொருள் எண்.3, மன்ற தீர்மான எண்.165/2007 ரத்து செய்ய நியமனக்குழு மூலம் மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இப்பொருளின் கடைசி பத்தியில் ''ரத்து செய்ய'' என்பதற்கு பதிலாக ''திரும்பப்பெற'' என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/7403/2007**
**ஆணையாளர் அவர்களின் 20.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.83/2008 பொருள் எண்.28

**வெளிநாடு செல்ல கடவுச் சீட்டு பெற தடையின்மை சான்று**

டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, மருத்துவ அலுவலர் மற்றும் C.V.V.O.i/c என்பவர் வெளிநாட்டில் (ஆஸ்திரேலியா)வில் தனது மகனுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக ஏப்ரல் மே 2008ல் ஆஸ்திரேலியா பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இத்தனியர் வெளிநாடு (ஆஸ்திரேலியா) பயணம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறுதல் வேண்டும்.

தனியர் 15.12.1997ல் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணியின் 15.12.1997ல் பணி வரன் முறைப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து அன்னாருக்கு 24.01.2000 முதல் இப்பதவியில் தகுதி காண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் அவர்களின் 04.02.2008 தேதியிட்ட குறிப்பில் தனியர் மீது விசாரணை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார். காவல்துறை கண்காணிப்பாளர் மத்திய பாதுகாப்பு பிரிவு மத்திய புலனாய்வுத்துறை சென்னை–2, அவர்களின் கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார். இவர் மீது துறை பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. வெளிநாடு சென்று வர ஆகும் செலவு ரூபாய் ஒரு இலட்சத்தை இவரின் கணவரின் தம்பி ஏற்பதாக இசைவு கடிதம் அளித்துள்ளார். வெளிநாட்டில் தங்கியிருக்கும் போது வேறு பணி மேற்கொள்ள மாட்டேன் என்று உறுதி பத்திரம் சமர்ப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் பணி நியமனம் செய்வதற்கு முன்பே 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கடவுச் சீட்டு பெற்றுள்ளார். இக் கடவுச் சீட்டு கடந்த 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் காலாவதியாகி விட்டது. கடவுச் சீட்டினை 2003ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் உரிய முன் அனுமதியின்றி புதுப்பித்துள்ளார். தனியர் கடவுச் சீட்டினை புதுப்பித்ததற்கு முன் அனுமதி பெற வேண்டும் என்பது தனக்கு தெரியாது என்றும், இதற்கு தன்னை மன்னிக்கும்மாறு கோரியுள்ளார். தனியர் தனது மகனின் மருத்துவச் சிகிச்சைக்காக வெளிநாட்டிற்கு (ஆஸ்திரேலியா) செல்ல தடையின்மை சான்றிதழ் கோரியுள்ளதை கருத்தில் கொண்டும், இவர் பணி நியமனத்திற்கு முன்பே கடவுச் சீட்டு பெற்றுள்ளதை கருத்தில் கொண்டும், செப்டம்பர்2003–ம் ஆண்டு கடவுச் சீட்டை புதுப்பித்ததற்கு பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

டாக்டர். எஸ். மகாலட்சுமி மருத்துவ அலுவலர், மற்றும் C.V.V.O.i/c என்பவர் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாடு (ஆஸ்திரேலியா) பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்கிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. வெளிநாட்டில் தங்கியிருக்கும் போது இவர் எந்த ஒரு பயிற்சியில் அல்லது கல்வி திட்டத்தில் அல்லது வேலை வாய்ப்பில் சென்னை மாநகராட்சியில் முன் அனுமதியின்றி சேருதல் கூடாது.
2. இவர் வெளிநாடு செல்ல ஏற்படும் செலவுக்கு சென்னை மாநகராட்சி ஏற்காது.
3. வெளிநாடு சென்ற பிறகு இவர் தனது பதவியை துறக்க விண்ணப்பிக்க கூடாது. அப்படி விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
4. இவர் வெளிநாட்டில் தங்கியிருக்கும் போது எந்த ஒரு வியாபாரத்திற்கோ, அல்லது வேலை தேடும் முயற்சியிலோ ஈடுபடக் கூடாது.
5. வெளிநாடு செல்லும் இவர் ஆறு மாதங்களுக்கு மிகாமல் விடுப்பு துய்க்க முறையாக விண்ணப்பித்து அவ்விடுப்பு உரிய அலுவலரால் ஒப்புதல் பெற்ற பின்னரே வெளிநாட்டில் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும்.
6. இந்நிகழ்வுக்கு பெற்ற தடையின்மை சான்றிதழை வேறு எந்த ஒரு பிரயாணத்திற்கும் பயன்படுத்தக்கூடாது.
7. இத்தடையின்மை சான்றிதழ் அளிக்கப்பட்ட ஆறு மாத காலத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பூ.து.ந.க.எண்.பி1/250 /2008
ஆணையாளர் அவர்களின் 21.02.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.84/2008 பொருள் எண்.29

பூங்கா பணிப்பார்வையாளர்கள் அயற் பணி நியமனம்

சென்னை மாநகராட்சி, பூங்காத்துறையில் பூங்காப் பணிபார்வையாளர்களுக்கான 12 மொத்த பணியிடங்களில் தற்போது 5 இடங்கள் காலியாக உள்ளன. சென்னை மாநகராட்சியில் அனைத்து பூங்காக்களும் மேம்படுத்தப்பட்டு தற்போது பூங்காக்களின் எண்ணிக்கை 245—ஆக உயர்ந்து உள்ளதாலும், நடப்பாண்டில் 100 பூங்காக்கள் மேம்படுத்தப்படவுள்ளதாலும், பூங்கா பணிப்பார்வையாளர் தேவை அத்தியாவசியமாக உள்ளது. மேற்கூறிய பூங்காக்கள் தவிர ஏறத்தாழ 400 சாலை ஓரப்பூங்காக்கள், மையதடுப்பு பூங்காக்கள், 147 போக்குவரத்து தீவுகள் ஆகியவைகளை சிறந்த முறையில் பராமரிக்க வேண்டிய அவசியமும் உள்ளது. மேலும் சாலையோரங்களில் மரம் நடும் பணிகள், அலங்காரச் செடிகள் மற்றும் மர உற்பத்தி நாற்று பண்ணைகள் பராமரிக்க பட வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து பொது இடங்களையும் பசுமையாக்கி பராமரிக்கும் முயற்சிக்கு மண்டலங்கள் அளவில் தோட்டக்கலை தொழிற் நுட்ப பணிகளுக்கு பூங்காப் பணிபார்வையாளர்கள் அத்தியாவசியமாக பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது.

எனவே, தற்போது உள்ள 7 பூங்கா பணிப்பார்வையாளுடன் காலியிடங்களான 5 பணியிடங்களையும், தோட்டக்கலையில் தேர்ச்சி பெற்ற உதவி வேளாண்மை அலுவலர்களை (Assistant Agriculture Officer) அரசு தோட்டக்கலை துறையிடமிருந்து (Department of Horticulture and Plantation Crops) அயற் பணியில் பணியமர்த்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பூ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ1/42866/2007**

**ஆணையாளர் அவர்களின் 14.02.2008 நாளிட்ட குறிப்பு**

## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.85/2008 பொருள் எண்.30

### தலைமை கணக்கு அலுவலர் பதவி அரசின் பின்னேற்பு அனுமதி வேண்டல்

சென்னை மாநகராட்சியில் கணக்கு அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கணக்கு அலுவலர் பதவியினை கண்காணிப்பாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலமாகவும், அயற்பணி அடிப்படையில் தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குகள் துறையிலிருந்து மூன்றாம் நிலை அலுவலர்களைக் கொண்டும் நிரப்பிட சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பணி விதிகளில் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வழிவகையின்படி, சென்னை மாநகராட்சியில் கணக்கு அலுவலர் திருமதி.கே.ஏ. சரஸ்வதி என்பவரும் அயற்பணி அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துவருகிறார். தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குகள் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் செயல்முறை ஆணை எண்.43380/07/எ1/(3), நாள் 20.09.2007ல், மேற்படி அலுவலருக்கு தலைமை கணக்கு அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு, தமிழ்நாடு எழுதுபொருட்கள் மற்றும் அச்சுத்துறையில் தலைமை கணக்கு அலுவலராக பணியமர்வு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி அலுவலர் சென்னை மாநகராட்சியில் துணை ஆட்சியர்(நிர்வாகம்) என்ற பதவிக்கான பொறுப்பு வகித்துவந்தார். சென்னை மாநகராட்சியில் பணி நியமனங்கள், பதவி உயர்வுகள், ஓய்வூதியப் பணப் பயன்கள் வழங்குதல், ஒழுங்கு நடவடிக்கை நிகழ்வுகள், ஊதிய நிர்ணயம் போன்ற பல்வேறு பணியமைப்பு சம்பந்தமான அனைத்து மண்டலங்கள் மற்றும் துறை சார்ந்த கோப்புகளை ஆய்வு செய்து சமர்ப்பிக்கும் பணியினை மேற்கொண்டுவந்தார்.

1000க்கும் மேற்பட்டோருக்கு கருணை அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் பணியமர்வு ஆணை வழங்க வேண்டிய பணியினை கணக்கு அலுவலர் திருமதி.கே.ஏ. சரஸ்வதி என்பவர் மேற்கொண்டுவந்ததால், இவருடைய பணி சென்னை மாநகராட்சியில் தொடர வேண்டியது அவசியமானது.

சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலர் பதவியில் காலிப்பணியிடங்கள் ஏதுமில்லாததால், திருமதி.கே.ஏ. சரஸ்வதி என்பவர் வகித்துவந்த கணக்கு அலுவலர் என்ற பதவியினை, தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குகள் துறையால் தனியருக்கு சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலராக பணியமர்வு செய்து ஆணை பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து, சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலர் பதவியில் காலிப்பணியிடம் ஏற்படும் நாளான 31.12.2007 வரை தற்காலிகமாக அரசின் பின்னேற்பு ஆணையினை எதிர்நோக்கி தலைமை கணக்கு அலுவலர் பதவியாக தரம் உயர்த்தி 24.10.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்ள வாயிலாக ஆணையிடப்பட்டது. மேலும், தரம் உயர்த்தப்பட்ட இப்பணியிடத்தில் மேற்படி அலுவலரை தலைமை கணக்கு அலுவலராக நியமிக்க கணக்குகள் மற்றும் கருவூலம் ஆணையரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

30.10.2007 நாளிட்ட தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குகள் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் செயல்முறை ஆணையில், திருமதி.கே.ஏ. சரஸ்வதி, தலைமை கணக்கு அலுவலரை சென்னை மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிய ஆணையிடப்பட்டது. இந்த ஆணையின்படி, திருமதி.கே.ஏ. சரஸ்வதி என்பவர் சென்னை மாநகராட்சியில் 01.11.2007 முதல் தலைமை கணக்கு அலுவலராக பணியேற்றுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலர் பதவியில் காலிப்பணியிடங்கள் ஏதுமில்லாதிருந்த காரணத்தினால், திருமதி.கே.ஏ. சரஸ்வதி என்பவர் வகித்துவந்த கணக்கு அலுவலர் என்ற பதவியினை, தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குகள் துறையால் தனியருக்கு சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலராக பணியமர்வு செய்து ஆணை பிறப்பித்த நாளிலிருந்து, 31.12.2007 வரை தற்காலிகமாக தலைமை கணக்கு அலுவலர் பதவியாக தரம் உயர்த்தியமைக்கு அரசின் பின்னேற்பு ஆணையினை பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மி..து.ந.க.எண்.மே1/அ1/8266/எ/96

ஆணையாளர் அவர்களின் 20.2.08 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.86/2008 பொருள் எண்:31

பணியமைப்பு

சென்னை மாநகராட்சியில் கம்பியில்லா தொடர் அமைப்பு ஏற்படுத்த அரசாணை எண்.351. ந.நி.ம.கு.வ துறை, நாள்.14.03.1986ல் அனுமதி பெறப்பட்டு அவ்வாண்டு முதல் இயங்கி வருகிறது.

இவ்வமைப்பை நன்கு நிர்வகிக்க தற்காலிகமாக தொழில் நுட்ப பதவிகளை தினக்கூலி அடிப்படையில் 2 தொழில் நுட்ப உதவியாளர்கள் (பட்டப்படிப்பு) மற்றும் 6 தொழில் நுட்ப உதவியாளர்கள் (பட்டைய படிப்பு) 89 நாட்களுக்கு மன்றத்தீர்மான எண்.5115/93, நாள்.06.01.1994 ன்படி அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தப் பட்ட நாள்

1) திரு.எஸ்.சிங்காரவேலு, (பட்டப்படிப்பு) – 22.08.1996
2) திரு.என்.சிவபதி (பட்டப்படிப்பு) – 22.08.1996
3) திரு.டி.ஆர்.சரவணபாண்டி (பட்டயபடிப்பு) –தற்போது செ.மா. பணியில் இல்லை
4) திரு.பி.ஆர்.சியாம்சுந்தர் (பட்டயபடிப்பு) – 22.08.1996
5) திரு.டி.வெங்கடேசன், (பட்டயபடிப்பு) – 22.08.1996
6) திரு.ஜி.செந்தில்குமார் (பட்டயபடிப்பு) – 22.08.1996
7) திரு.டி.வி.வெங்கட்டராகவன் (பட்டயபடிப்பு) – 22.08.1996
8) திரு.வி.முத்துகுமார் (பட்டயபடிப்பு) – 22.08.1996

கம்பியில்லா தொடர் பிரிவில் 2 உதவி பொறியாளர்கள் (பட்டப்படிப்பு) மற்றும் 6 தொழில் நுட்ப உதவியாளர்கள் (பட்டய படிப்பு) பணியிடங்களை தோற்றுவிக்கவும் அவ்வாறு தோற்றுவிக்கப்படும் பணியிடங்களில் தொழில் நுட்ப ஊழியர்களை ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்திக்கொள்வதற்கும் அரசு ஆணை எண்.81 ந.நி.ம.கு.வ.(மா.ந.3) துறை, நாள்: 22.08.1996, பெறப்பட்டு, தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வந்த தொழில் நுட்ப உதவியாளர்கள் தற்காலிகமாக ஓராண்டுகாலத்திற்கு காலமுறை ஊதிய விகிதத்தில் பணியமர்வு செய்யப்பட்டனர்.

பின்னர் அவசர அவசிய காரணங்களால் பணியமர்த்தப்பட்ட 2 உதவி பொறியாளர்கள் (பட்டப்படிப்பு) மற்றும் 6 தொழில் நுட்ப உதவியாளர்கள் (பட்டைய படிப்பு) ஆகியோரை வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நியமனம் செய்வதில் விலக்களித்து மேற்படி தினக்கூலி அடிப்படையில் பணியாற்றிய தொழில்நுட்ப உதவியாளர்களைக் கொண்டு அப்பணியிடங்களில் நியமிக்கப்பட்டதற்கு அரசாணை (3) ப.எண்.180 ந.நி.ம.கு.வ.(மா.ந.3) துறை, நாள்: 10.09.1998ன்படி பின்னேற்பு வழங்கப்பட்டது. வரிசை எண் 3ல் உள்ள திரு ஆர்.சரவணபாண்டி (பட்டயப்படிப்பு) 2001ம் ஆண்டு முதல் பணிக்கு வராமல் நின்றுள்ளார்.

எனவே அவரது பெயரை நீக்கம் செய்து பணியில் உள்ள இந்த 7 பொறியாளர்கள் கம்பியில்லா தொடரமைப்பு பிரிவில் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக காலமுறையிலான ஊதிய விகிதத்தில் தொடர்ந்து பணிபுரிந்து வருவதால், இந்நிகழ்வினை சிறப்பு நிகழ்வாக கருதி இந்த ஏழு பொறியாளர்களின் நியமனங்களையும் வரன்முறை செய்யலாம்.

தற்போது சென்னை மாநகராட்சி மின் துறையில் 15 இளநிலை/ உதவி பொறியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது. எனவே அரசின் பின்னேற்பு ஆணையினை எதிர்நோக்கி இவற்றில் 2 காலி பணியிடங்களில் கம்பியில்லா தொடர் அமைப்பில் பணி புரியும் 2 உதவி பொறியாளர்கள் 1. திரு.எஸ்.சிங்காரவேலு, 2. திரு.என்.சிவபதி ஆகியோரை பணியில் ஈர்த்துக்கொள்ளவும் (absorb), 5 காலி இளநிலை பொறியாளர்கள் பணியிடங்களின் தரத்தினை தொழில் நுட்ப உதவியாளர்கள் என குறைத்து இந்த ஐந்து காலி பணியிடங்களில் கம்பியில்லா தொடர் அமைப்பில் பணி புரியும் ஐந்து தொழில் நுட்ப உதவியாளர்களான 1. திரு.பி.ஆர்.சியாம்சுந்தர் 2. திரு.டி.வெங்கடேசன், 3. திரு.ஜி.செந்தில்குமார் 4. திரு.டி.வி.வெங்கட்டராகவன் 5. திரு.வி.முத்துகுமார் ஆகியோரை பணியில் ஈர்த்துக்கொள்ளவும் (absorb) நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/7563/07
ஆணையாளர் அவர்களின் 19.02.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.87/2008 பொருள் எண்.32

பணியமைப்பு – உதவி சுகாதார அலுவலர் பதவி உயர்வு

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் உதவி சுகாதார அலுவலர் பதவி வகுப்பு II ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியினை நிரப்ப சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி) ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றத்தினால் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.9100–275–14050 மற்றும் இதர படிகள்.

சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையில் உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 17. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க மைய நாள் ஒவ்வொரு ஆண்டு மே மாதம் 15ம் தேதியாகும். இப்பணியிடங்களில் மைய நாளின் போது 6 உதவி சுகாதார அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளது. அதன் விவரம் பின் வருமாறு.

| வரிசை எண் | உதவி சுகாதார அலுவலரின் பெயர் | உதவி சுகாதார அலுவலர் பணியிடம் காலியானதற்கான காரணம் |
|---|---|---|
| 1 | டாக்டர்.எஸ்.சி.பரதன் | 04.02.1993 முதல் மருத்துவ அலுவலராக பதவி இறக்கம் செய்யப்பட்டதால் ஏற்பட்ட காலிப் பணியிடம். |
| 2 | டாக்டர். ஆர்.சொக்கலிங்கம் | 31.08.1994 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடம். |
| 3 | டாக்டர். தேவ பார்த்த சாரதி | 30.6.1999 முதல் பணி துறப்பு செய்ததால் ஏற்பட்ட காலிப் பணியிடம். |
| 4 | டாக்டர். ரங்கநாதன் | 31.3.2000 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடம். |
| 5 | டாக்டர். ராஜசேகரன் | 31.12.2002ல் பணி துறப்பு செய்ததால் ஏற்பட்ட காலிப்பணியிடம் |
| 6 | டாக்டர். கே.வி.சீனிவாசலு | 30.09.2003 ல் வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடம். |

உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் கடைசியாக கடந்த 15.05.2004 ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. பின்னர் ஊட்டப் பதவியில் உள்ள மருத்துவ அலுவலர்கள் எவரும் பொது சுகாதாரப் பட்டயப்படிப்பில் தேர்ச்சி பெறாததாலும் நிர்வாக காரணங்களினாலும் உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட வில்லை. தற்போது 15.05.2007 ஐ மைய நாளாக கொண்டு உதவி சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சி பொது சுகாதார மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998 – ன் படி உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு.
(G.O.Ms.No.91, M.A & W.S. Dept, dt.28.5.98)

| Class, Scale of Pay | Method of recruitment | Qualification |
|---|---|---|
| Class – II,<br>9100 - 275 - 14050 | 2) By direct recuitment (or)<br>3) By promotion from the categories of Medical Officer (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) (or)<br>4) By appointment from the category of Health Officer in Tamil Nadu Public Health Services or from any other state service on deputation. | 1) M.B.B.S. Degree with D.P.H.<br>2) A pass in Account Test for Executive Officer. |

பணி மூப்பு வாய்ந்த மருத்துவ அலுவலரின் விவரம் பின்வருமாறு.

**சு.து.ந.க.எண்.சி1/7563/07**

| வரிசை எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | மருத்துவ அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | டாக்டர்.எஸ்.மணி | 19.04.1995 | வரையறுக்கப்பட்ட பணி விதிகளை தற்போது பூர்த்தி செய்துள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 2 | டாக்டர்.எஸ்.மணி மொழி | 19.04.1995 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 3 | டாக்டர்.சுகுண பூஷண குமாரி | 19.04.1995 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 4 | டாக்டர்.எச்.பூமா | 12.05.1995 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 5 | டாக்டர்.டீ.காந்திமதி | 19.04.1995 | இவர் டி..பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. மேலும் இவர் 16.08.2006 முதல் பணிக்கு வராமல் உள்ளதால் 10 (பி) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 6 | டாக்டர்.இ.சரஸ்வதி | 19.04.1995 | 2004 – 2005 ஆம் ஆண்டு உ.சு.அ. தெரிவுப்பட்டியலில் இவரது பெயர் சேர்க்கப்பட்டு 23.06.2006 அன்று உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டு அப்பதவியில் பணிபுரிந்து வருவதால் இவரது பெயரை தவிர்க்கலாம். |
| 7 | டாக்டர்.பி.நத்தி வர்மன் | 19.04.1995 | இவர் டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. மேலும், இவர் 15.12.2005 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு விதி 10 (பி) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு இறுதி ஆணை வேண்டி 24.9.2007 ல் கோப்பு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 8 | டாக்டர்.பீனா செரியன் | 20.04. 1995 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. மேலும் இவர் 21.02.2002 பிற்பகல் முதல் மத்திய சுகாதாரத்துறையில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார். |

| | | | |
|---|---|---|---|
| 9 | டாக்டர்.எ.பிரபாவதி | 19.04.1995 | 1998 – 1999 ஆம் ஆண்டு உ.சு.அ. தெரிவுப்பட்டியலில் இவரது பெயர் சேர்க்கப்பட்டு 9.07.1999 அன்று உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார். |
| 10 | டாக்டர்.தவமணி | 19.04.1995 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 11 | டாக்டர்.எஸ்.சித்ரா | 15.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்ான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 12 | டாக்டர்.சி.சாந்தி | 15.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 13 | டாக்டர்.வைஜெயந்தி மாலா | 12.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 14 | டாக்டர்.எம்.தரணி லதா | 17.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 15 | டாக்டர்.ஆர். அனந்தராமகிருஷ்ணன் | 17.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. மேலும் இவர் 1.05.2004 முதல் இவர் பணிக்கு வராமல் உள்ளதால் 10 (பி) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு கோப்பு இறுதி ஆணை வேண்டி 10.3.2006ல் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 16 | டாக்டர். பாக்கியரதி | 17.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 17 | டாக்டர்.அருள் சாந்தி ராணி | 11.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்ான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 18 | டாக்டர்.எம்.ராஜா | 15.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 19 | டாக்டர்.எஸ்.மகாலட்சுமி | 15.12.1997 | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி முழுத் தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 20 | டாக்டர்.எம்.லட்சுமி தேவி | 12.12.1997 | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி முழுத் தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 21 | டாக்டர்.வி.ரேணுகா | 11.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 22 | டாக்டர்.எஸ்.பிரேமா | 13.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 23 | டாக்டர்.கே.சோமசுந்தரி | 12.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 24 | டாக்டர்.எ.கல்யாணி | 13.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 25 | டாக்டர்.சத்திய பாமா | 15.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. மேலும் இவர் 8.2.2005 முதல் 19.02.2006 வரை பணிக்கு வராமல் இருந்ததால் இவரது ஊதிய உயர்வு 2 ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து 5.01.2007 நாளிட்ட செயல்முறை ஆணையில் தண்டனை வழங்கப்பட்டு இன்னும் தண்டணை காலம் முடிவடையவில்லை. மேலும் 22.7.2006 முதல் இந்நாள் வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததால் மண்டலம் 3 ல் இவர் மீது தனியே நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 26 | டாக்டர்.எ.சுகன்யா தேவி | 15.12.1997 | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி முழுத்தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 27 | டாக்டர்.ஆர்.சுமதி | 17.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |
| 28 | டாக்டர்.என்.கண்ணன் | 17.12.1997 | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி முழுத்தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 29 | டாக்டர்.ஆர்.ராஜேஸ்வரி | 15.12.1997 | டி.பி.எச்.தேர்ச்சி பெறவில்லை. எனவே இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 30 | டாக்டர்.எஸ்.மல்லிகா | மதுரை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள்.26.6.1996<br>சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள்.8.3.2001 | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி முழுத்தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயர் உ.சு.அ பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

கடைசியாக 15.5.2004 யை மைய நாளாகக் கொண்டு உதவி சுகாதார அலுவலருக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. 15.05.2005 மற்றும் 15.05.2006 யை மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்படவேண்டிய உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி அனைத்து தகுதிகள் வாய்ந்த மருத்துவ அலுவலர்கள் இல்லாத காரணத்தால் தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவில்லை.

மேற்படி வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி 15.5.2007 யை மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின் வருமாறு அமைகிறது.

| வ.எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்த நாள் | கல்வி மற்றும் பிற தகுதிகள் |
|---|---|---|---|
| 1 | டாக்டர். எஸ்.மணி | 19.4.1995 | 1)M.B.B.S. Degree with D.P.H.<br>2)Passed Account test for Executive Officer. |
| 2 | டாக்டர்.எஸ்.மகாலட்சுமி | 15.12.1997 | 1) M.B.B.S. Degree with D.P.H.<br>2) Passed Account test for Executive Officer. |
| 3 | டாக்டர்.எம். லட்சுமி தேவி | 12.12.1997 பிற்பகல் | 1)M.B.B.S. Degree with D.P.H.<br>2)Passed Account test for Executive Officer. |
| 4 | டாக்டர்.ஏ. சுகன்யா தேவி | 15.12.1997 | 1)M.B.B.S. Degree with D.P.H.<br>2)Passed Account test for Executive Officer. |
| 5 | டாக்டர்.என். கண்ணன் | 17.12.1997 | 1)M.B.B.S. Degree with D.P.H.<br>2)Passed Account test for Executive Officer. |
| 6 | டாக்டர்.எஸ்.மல்லிகா | மதுரை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள்.26.6.1996<br>சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள்.8.3.2001 | 1)M.B.B.S. Degree with D.P.H.<br>2)Passed Account test for Executive Officer. |

மேற்கண்ட பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள 6 மருத்துவ அலுவலர்களும், உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான முழு தகுதிகளும் பெற்றுள்ளனர். இவர்கள் மீது துறைபூர்வமான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. விழிப்பு குழுமத்திலும் இவர்கள் மீது விசாரனை ஏதும் நிலுவையில் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

<u>சு.து.ந.க.எண்.சி1/7563/07</u>

எனவே 15.05.2007 ஐ மைய நாளாகக் கொண்டு மேற்கண்ட 6 மருத்துவ அலுவலர்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள உதவி சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும் மற்றும் இந்த தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள மருத்துவ அலுவலர்களான 1) டாக்டர்.எஸ்.மணி 2) டாக்டர்.எஸ்.மகாலட்சுமி 3) டாக்டர்.எம்.லட்சுமி தேவி 4) டாக்டர்.ஏ.சுகன்யா தேவி 5) டாக்டர்.என்.கண்ணன் மற்றும் 6) டாக்டர்.எஸ்.மல்லிகா ஆகியோரை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.9100 – 275 – 14,050 (இதர படிகளுடன்) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளித்து பணி நியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ2/16650/2007

ஆணையாளர் அவர்களின் 14.02.2008 நாளிட்ட குறிப்பு

## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.88/2008 பொருள் எண்.33

### வருவாய் அலுவலர் காலி பணியிடம் நிரப்ப அனுமதி

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில், வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.கே.ஜோதிராம் என்பவர் 30.06.2007 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் வருவாய் அலுவலர் பணியிடம் காலியாகவுள்ளது.

வருவாய் அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 1ஏ என வகைப்படுத்துள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியவை அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளாகும். இப்பதவியில் அரசாணை எண்.544, ந.நி.ம.கு.வ.து. நாள்.20.10.2004ன்படி திரு.கே.ஜோதிராம் என்பவர் பதவி உயர்வின் மூலம் வருவாய் அலுவலராக பணியமர்த்தப்பட்டார். வயது முதிர்வு காரணமாக 30.06.2007 அன்று இவர் ஓய்வு பெற்று விட்டதால், வருவாய் அலுவலர் பதவிக்கு தெரிவுப் பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் 1970ன்படி வருவாய் அலுவலர் பதவிக்கான பணி நியமன விதிகள் பின்வருமாறு:–

| Class/Category and Name of the post/ Scale of pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **CLASS-I-ARevenue Officer**<br>(Rs.12000-375-16500) | (a) By appointment on deputation.<br>(b) By transfer from Additional Revenue Officer | A Graduate of a recognized University.<br>(i) A pass in the Account Test for Subordinate Officers Parts I and II or any other Account Test prescribed by the Government as equivalent thereto;<br>(ii) A Pass in the Revenue test Parts I to III prescribed for the Madras Revenue Subordinates Service; and<br>(iii) Adequate experience for a period of not less than five years of collection and administration. |

மேற்படி வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி 01.04.2007 மைய நாளாக கொண்டு வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு பின்வரும் அலுவலர்களின் பெயர்களை பரிசீலிக்க வேண்டியுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/16650/2007**

| வ.எண். | பெயர் மற்றும் பதவி | குறிப்புரை |
|---|---|---|
| 01 | திரு.எஸ்.சந்திரசேகரன், கூடுதல் வருவாய் அலுவலர் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின் படி அனைத்து தகுதிகள் பெற்றுள்ள போதிலும், இவர் 7வது மண்டலத்தில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் வரிமதிப்பீடு குறைபாடுகள் குறித்து, இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு வகுப்பு 1 மற்றும் 2 (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) 1970 விதி10(பி)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் இவரது பெயரினை வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்க இயலாத நிலை ஏற்பட்டது. பின்னர் அவ்வொழுங்கு நடவடிக்கை இவ்வலுவலக செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/7947/07, நாள்.12.12.2007ல் இறுதியாக கைவிடப்பட்டது. இவர் 31.12.2007 அன்று வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்ட படியால் இவரது பெயரினை வருவாய் அலுவலர் பதவிக்கு பரிசீலிப்பதை தவிர்க்க வேண்டியுள்ளது. |
| 02 | திரு.ட்டி.எஸ்.ராஜன், கூடுதல் வருவாய் அலுவலர் | இவர் 30.06.2007 அன்று வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட படியால், இவரது பெயரினையும் வருவாய் அலுவலர் பதவிக்கு பரிசீலிப்பதை தவிர்க்க வேண்டியுள்ளது. |
| 03 | திரு.எம். நாமதேவ், கூடுதல் வருவாய் அலுவலர் | இவர் 11.07.2007 அன்று கூடுதல் வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரை கூடுதல் வருவாய் அலுவலராக பணியமர்வு செய்ததற்கு அரசாணை (ப) எண்.498, ந.நி.ம.கு.வ.து. நாள்.16.10.2007ல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. |

சென்னை மாநகராட்சியில் வருவாய் அலுவலர் பதவி முக்கியத்துவம் வாய்ந்த பதவியாகும். சென்னை மாநகரில் பெருகி வரும் கட்டுமானங்கள் / வணிக வளர்ச்சிகளுக்கு சொத்து வரி நிர்ணயிப்பது, தொழில் வரி நிர்ணயிப்பது மற்றும் சென்னை மாநகராட்சி வருவாயை உயர்த்தும் வகையில் களப்பணிகள் செய்ய வேண்டி அத்தியாவசிய பணிகள் வருவாய் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படும் பல்வேறு பணிகளை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், சென்னை மாநகராட்சியின் வருவாய்த்துறைக்கு துறைத் தலைவர் என்பதாலும் இப்பதவியினை நிரப்ப அவசியமாகிறது. இப்பதவி உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலுக்கான வாக்காளர் பதிவு செய்யும் அதிகாரி என்ற சட்டப்படியான பொறுப்புகள் கொண்ட பதவியாகும்.

வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு, மேற்படி பட்டியலில் வ.எண்.3லுள்ள திரு.எம். நாமதேவ் என்பவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி அனைத்து தகுதிகள் பெற்றுள்ள போதிலும், 01.04.2007 என்ற மைய நாளில் கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் இல்லை. கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான சம்பள விகிதமும் வருவாய் அலுவலர் பதவிக்கான சம்பள விகிதமும் ஒன்றே. (ரூ.12000–375–16500)

1) மேற்குறிப்பிட்ட காரணங்களினால், வருவாய் அலுவலர் பணியிடம் பூர்த்தி செய்ய வேண்டியுள்ள காரணத்தினால், தற்போது கூடுதல் வருவாய் அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.எம்.நாமதேவ் என்பவரைக் கொண்ட ஒரு நபர் தெரிவுப்பட்டியல் தயாரிக்கவும்,

2) வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு கூடுதல் வருவாய் அலுவலர் திரு.எம்.நாமதேவ் என்பவருக்கு ரூ.12000–375–16500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்கவும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்